| MSSRF Science for Sustainable Development | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | மாவட்டம் : | **சிவகங்கை** | காலம் : | **19/04/2024** | முதல் | **23/04/2024** |
| | அறிக்கை எண் : | **032/ 2024** | வெளியீட்டு நாள் : | | **18/04/2024** | |

## சிவகங்கை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35°-37° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°-27° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| **கடந்தவார வானிலை** (13.04.2024 **முதல்** 17.04.2024) | | | | | | **அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு –23-04-2024- 08.30 வரை** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 13/04 | 14/04 | 15/04 | 16/04 | 17/04 | **தேதி** | **நாள்-1** 19/04 | **நாள்-2** 20/04 | **நாள்-3** 21/04 | **நாள்-4** 22/04 | **நாள்-5** 23/04 |
| 4.7 | 0.5 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 36 | 35 | 37 | 37 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 39 | 38 | 39 | 38 | 39 |
| 25 | 25 | 26 | 27 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 27 | 26 | 26 | 27 | 27 |
| 6 | 4 | 5 | 4 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 4 | 2 | 3 | 3 |
| 82 | 83 | 72 | 80 | 70 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 61 | 41 | 64 | 41 | 64 | | 20 | 30 | 20 | 20 | 20 |
| 6 | 7 | 10 | 7 | 10 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 14 | 12 | 14 | 14 | 14 |
| தென் மேற்கு | வட கிழக்கு | தெற்கு | வட கிழக்கு | தெற்கு | காற்றின் திசை | **தெற்கு** | **தென் கிழக்கு** | **தென் கிழக்கு** | **தென் கிழக்கு** | **தென் கிழக்கு** |

## குறுஞ்செய்தி :

அடுத்த 5 நாட்களுக்கு வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு. அதிகபட்ச வெப்பநிலையானது 38°-39° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 26°-27°செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 12 முதல் 14 கி.மீ வேகத்தில், தெற்கு மற்றும் தென்கிழக்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

அதிக அதிகபட்ச வெப்பநிலை மற்றும் மிதமான காற்று காரணமாக ஏற்படக் கூடிய ஈரப்பத இழப்பினை ஈடுசெய்ய பயிர்களுக்கு அதிக அளவில் நீர் பாசனத்தினை மேற்கொள்ளவும்.

**கால்நடை வளர்ப்பு :**

வெப்பத்திலிருந்து தங்களது கால்நடைகளை பாதுகாக்க தினமும் போதுமான அளவில் தாதுக் கலவையினை கால்நடைகளுக்கு கொடுக்க வேண்டும். குறிப்பாக பொட்டாசியம் நிறைந்த தாதுக் கலவையினை கொடுப்பது மிகவும் அவசியமாகும். பகல் நேரங்களில் மாட்டு கொட்டகைகளின் பக்கவாட்டில் ஈரமான சணல் சாக்குககளை கட்டி விடவும். கால்நடைகளுக்கு நாள் ஒன்றுக்கு 80

**விவசாயம் :**

கால்நடை வளர்க்கும் விவசாயிகள் கோடை காலங்களில் ஏற்படும் தீவனப்பயிர்கள் பற்றாக்குறையினை தவிர்க்கும் வகையில் பாசன வசதியுள்ள விவசாயிகள் 10 சதவீத நிலத்தில் கம்பு நேப்பியர் போன்ற தீவனப்பயிர்களை சாகுபடி செய்யலாம்.

மாவட்டத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 5 நாட்களுக்கு (19.04.2024 முதல் 23.04.2024) அதிகமான வெப்பம் மற்றும் ஈரப்பத்ததுடன் கூடிய அசவுகரியமான வானிலை நிலவ வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் வயல்வெளி வேலைகளை காலை மற்றும் மாலை நேரங்களில் செய்ய திட்டமிடவும். போதுமான அளவு தண்ணீர் குடிக்கும் படியும் மதிய (12 மணி முதல் 4 மணி வரை) நேரத்தில் வயலில் வேலை செய்வதைத் தவிர்த்து பாதுகாப்பாக இருக்கும்படியும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 12 முதல் 14 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும். கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : தக்காளி, கத்தரி, கால்நடை**

**தக்காளி:**

தக்காளி பயிரில் உயர் மகசூலை பெற ஒரு எக்டருக்கு 325 கிலோ என்ற அளவில் யூரியா மற்றும் 250 கிலோ என்ற அளவில் பொட்டாஷ் இவற்றை மூன்று சமமான அளவுகளில் முறையே நடவு செய்து 30வது, 45வது, மற்றும் 60 வது நாட்களில் மேலுரமாக அளிக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

**கத்தரி:**

தோட்டக்கலை பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகளான இலைத் தத்துப்பூச்சி, இலைபேன், வெள்ளை ஈக்கள் மற்றும் சுருள் வெள்ளை ஈக்களின் தாக்குதல் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

எனவே விவசாயிகள் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் நடமாட்டத்தை கண்காணிக்க ஏக்கருக்கு 5 என்ற எண்ணிக்கையில் மஞ்சள் வண்ண ஒட்டும் பொறிகள் வைத்து கட்டுப்படுத்தலாம்.

தாக்குதல் அதிகம் காணப்படும் நேரங்களில் 1 லிட்டர் தண்ணீரில் 50 கிராம் வேப்பங் கொட்டை கரைசல் அல்லது 30 மில்லி வேப்ப எண்ணெய் இவற்றில் ஏதாவது ஒன்றை கலந்து தெளிக்க வேண்டும்.

**கால்நடை:**

நிலவும் பருவச் சூழ்நிலையானது கால்நடைகளுக்கு தோல்பகுதியில் தொற்று ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது. ஆகையால் அருகில் உள்ள கால்நடை மருத்துவரை அணுகி ஆலோசனையை பெற்றுக் கொள்ளவும். மேய்ச்சலுக்காக கால்நடைகளை நீண்ட தூரம் நடக்க வைக்க வேண்டாம். கால்நடைகளுக்கு அதிக அளவிலான பசுந்தீவனம் மற்றும் அடர் தீவனங்களை கொடுக்கவும். மேலும் கால்நடைகளுக்கு தீவனம் கொடுக்கும் வேளைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும்.